தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை,
உணவு பாதுகாப்பு பிரிவு
காஞ்சிபுரம் மாவட்டம்

## நாளிதழ் செய்திக் குறிப்பு

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திரு.பா.பொன்னையா.இ.அ.ப., அவர்களின் தலைமையில் உணவு பாதுகாப்பு துறையின் வழிகாட்டுதல் குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தின் போது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் உணவு பாதுகாப்பு துறையின் வாட்ஸ் ஆப் புகார் எண் விழிப்புணர்வு பலகை அறிமுகம் செய்யப்பட்டு அதனை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி.திருவளர்செல்வி அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும் அனைத்து அரசு கல்வி நிறுவனங்கள் மற்றும் அரசு துறை அலுவலகங்களிலும் அனைவரும் அறியும் வண்ணம் உணவு பாதுகாப்பு துறையின் வாட்ஸ் ஆப் புகார் எண் காட்சிப்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

மேலும் உணவு வணிக நிறுவனங்களில் கடைபிடிக்க வேண்டிய பொன் மொழிகள் அடங்கிய மாதிரி காட்சி பலகைகள் அறிமுகம் செய்யப்பட்டு உரிமம் பெற்ற அனைத்து உணவு வணிக நிறுவனங்களும் நுகர்வோர் அறியும் வண்ணம் காட்சி பலகைகள் வைக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

தடைசெய்யப்பட்ட புகையிலை பொருட்கள் குறித்த விழிப்புணர்வு பலகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, அனைத்து கல்வி நிறுவனங்களிலும் காட்சிப்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

மேலும் உரிமம் பெறாத மதிய உணவு மையம், அங்கன்வாடி மையம், அம்மா உணவகம், நியாய விலைக்கடை உள்ளிட்ட அனைத்து அரசு துறை சார்ந்த உணவு நிறுவனங்களும் உடனடியாக உணவு பாதுகாப்பு துறையின் பதிவு/உரிமம் பெற அறிவுறுத்தப்பட்டது.

மேலும் உணவு வணிகம் செய்யும் வணிகர்கள் அனைவரும் உணவு பாதுகாப்பு துறையில் உரிமம்/பதிவு சான்று கட்டாயம் பெற வேண்டும் எனவும், பொது மக்கள் உணவு பாதுகாப்பு துறையின் உரிமம்/பதிவுச்சான்று பெற்ற உணவு வணிகர்களிடம் உணவுப்பொருட்களை நுகர்வு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேலும் நுகர்வு செய்யும் உணவுப்பொருட்களில் தர குறைபாடு இருப்பின் 9444042322 என்ற வாட்ஸ்ஆப் எண்ணிற்கு பொதுமக்கள் புகார் அளிக்க மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது.

மேலும் கூட்டத்தின்போது மாவட்ட நியமன அலுவலர், மரு.அ.இராமகிருஷ்ணன அனைத்து உணவு பாதுகாப்பு அலுவலர்கள், அனைத்து அரசு துறை அலுவலர்கள், காஞ்சிபுரம் மேற்கு மாவட்ட அனைத்து வணிகர் சங்கங்களின் பேரவை தலைவர் திரு.எம்.இராமகிருஷ்ணன மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஓட்டல் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் திரு.கந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.